பக்கங்கள் 17+4

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | மாசி 23 வெள்ளிக்கிழமை 07.03.2025 | அதிர்வு 216

## ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை: மேலதிக வகுப்புகளுக்கு 11ஆம் திகதி முதல் தடை

2024 ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையை இலக்காகக் கொண்ட அனைத்து கற்றல் செயற்பாடுகளும் எதிர்வரும் 11 ஆம் திகதி 03

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# பேரம் பேசும் சக்திகளாக அல்லாமல் அரசின் பங்காளிகளாக மாறுங்கள்

## தமிழ்ப் பிரதிநிதிகளிடம் மதனவாசன் வேண்டுகோள்

(எஸ்.நிதர்ஷன்)

அரசிடம் பேரம் பேசும் சக்திகளாகத் தொடர்ந்தும் இருப்பதை விட பங்காளிகளாக மாற வேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் ப.மதனவாசன் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் இன்று நடத்திய ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் கிளிநொச்சி மாவட்ட பிரதம அமைப்பாளராக நான் நியமிக்கப்பட்டிருக்கின்றேன். கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவினால் இந்த நியமனம் எனக்கு வழங்கப்பட்டிருக்கின்றது.

ஒருதூர நோக்குடன் பயணிக்க வேண்டிய தேவை தமிழ்ச் சமூகத்துக்குத் தற்போது இருக்கும் காரணத்தால் இந்த நியமனத்தை நான் ஏற்றுக்கொண்டிருக்கின்றேன். 03

# ரணிலின் தொங்கு பாலத்திலே பயணிக்கின்றது அநுர அரசு

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சாடல்

தேசிய மக்கள் சக்தி அரசு, ரணிலின் தொங்கு பாலத்திலே பயணிக்கின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஐக்கிய ஊழியர் சங்கத்தின் பிரதிநிதிகளுடன் இன்று நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த அரசு பயணித்த தொங்கு பாலத்திலே இந்த அரசும் பயணிக்கின்றது. அதே வழிமுறைகளையே பின்பற்றி வருகின்றது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் முதன்மைச் செலவை 13 வீதமாக மாற்றியுள்ளனர்.

சர்வதேச நாணய நிதியத்துடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். இவ்வாறான பேச்சுவார்த்தையை நடத்த மாட்டார்கள் என்பது அரசின் நடவடிக்கைகளில் 03



உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally



# ‘கனேமுல்ல சஞ்சீவ’ படுகொலை: சந்தேகநபர்களுக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, புதுக்கடை நீதிமன்றத்துக்குள் கடந்த பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த “ கனேமுல்ல சஞ்சீவ” என்பவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 9 சந்தேகநபர்களை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேகநபர்கள் காணொளி அழைப்பு ஊடாக கொழும்பு பிரதான நீதிவான் தனுஜா லக்மாலி முன்னிலையில் இன்று வெள்ளிக்கிழமை ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்களின் பாதுகாப்பைக் கருத்தில்கொண்டு காணொளி அழைப்பு ஊடாக கனேமுல்ல சஞ்சீவவின் கொலை வழக்கு இன்று விசாரணைக்குட்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# இளம் குடும்பப் பெண் வன்புணர்வு: 37 வயது குடும்பஸ்தர் ஒருவர் கைது

(கி.வசந்தன்)

வவுனியாவில் 31 வயது இளம் குடும்பப் பெண் ஒருவரை மிரட்டி பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் எனக் கூறப்படும் 37 வயது குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் இன்று தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, பம்பைமடு கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் 31 வயது குடும்பப் பெண் ஒருவரை 2023 ஆம் ஆண்டு ஜுன் மாதம் அயலில் வசிக்கும் குடும்பஸ்தரான 37 வயது நபர் ஒருவர் தனது வீட்டுக்கு அழைத்து மேற்படி பெண்ணை மிரட்டி பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார். இதனை அவர் வீடியோவாகவும் பதிவு செய்துள்ளார்.

அந்த வீடியோவை வெளியிடுவேன் என மிரட்டி மேற்படி பெண்ணை மீண்டும் பல தடவைகள் அழைத்து அந்த நபர் பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார். இதனால் கர்ப்பமான மேற்படி பெண் குழந்தை ஒன்றையும் பிரசவித்துள்ளார். இதனையடுத்து பூவரசங்குளம் பொலிஸ் நிலையத்தில் 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27 ஆம் திகதி மேற்படி பெண் முறைப்பாடு செய்துள்ளார். முறைப்பாட்டையடுத்து சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பூவரசங்குளம் பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை முன்னெடுத்து வந்த போதும், இந்தச் சம்பவம் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்ட குடும்பஸ்தர் தலைமறைவாகியிருந்தார். இந்நிலையில், வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து முள்ளியவளைப் பகுதியில் உள்ள காட்டில் மறைந்திருந்த நிலையில் 37 வயதுடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளின் பின் சந்தேகநபரை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகப் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.



# நீர் நிரம்பிய குழியில் வீழ்ந்து ஒரு வயது குழந்தை உயிரிழப்பு

புத்தளம் மாவட்டம், ஆராய்ச்சிக்கட்டுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வைரம்கட்டுவ பகுதியில் உள்ள வீடொன்றுக்கு அருகில் தோண்டப்பட்ட நீர் நிரம்பிய குழியில் வீழ்ந்து குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வைரம்கட்டுவ பகுதியில் வசிக்கும் ஒரு வயதுடைய குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

குழந்தையின் சடலம் சிலாபம் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஆராய்ச்சிக்கட்டுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### ஜி.சீ.ஈ. சாதாரண...

நள்ளிரவு முதல் தடை விதிக்கப்படவுள்ளன.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, 2024 ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான பிரத்தியேக வகுப்புகள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் பயிற்சி பட்டறை என்பவற்றுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஜி.சீ.ஈ. சாதாரணத் தர ப்பரீட்சை எதிர்வரும் 17 ஆரம்பமாகவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

### பேரம் பேசும்...

பேரம் பேசும் சக்திகளாகத் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு எல்லோருக்கும் இருக்கின்றது. எமது கட்சி இந்தப் பேரம் பேசும் சக்தி எனும் விடயத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக அந்த ஆட்சியின் பங்காளர்களாகத் தமிழ் மக்களும் இருக்க வேண்டும்.

இதன்மூலம் தமிழ் மக்கள் உரிமையோடு சேர்ந்து பயணிக்கக் கூடியவர்களாகத் தமிழ் மக்கள் இருக்க வேண்டும்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 2015 ஆம் ஆண்டு அடைந்த தோல்விக்குப் பின்னர் துவண்டு விடவில்லை. மீண்டும் 2019 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றங்களினூடாக எழுச்சி பெற்றது.

இப்போது எமக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கின்றது. தேசிய அமைப்பாளராக நாமல் ராஜபக்ஷ கட்சியைப் பொறுப்பெடுத்துள்ளார். அவரது தலைமையின் கீழ் இளைய தலைமையினர் நாடளாவிய ரீதியில் தொடர்ந்தும் பயணிக்கக் காத்திருக்கின்றனர்.

இது ஒரு தூரநோக்கு அரசியல் பயணம். எடுத்த மாத்திரத்திலேயே நாட்டின் அரசியல் போக்கை மாற்றிவிட முடியும் எனச் சொல்லவில்லை. நீண்ட கால அடிப்படையில், அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளும் வகையில் எமது பயணம் அமையும்.

இம்முறை நடைபெறவிருக்கின்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் 339 உள்ளூராட்சி சபைகளுக்கு தேர்தல் நடைபெறுவது உறுதியாகியிருக்கும் சூழலில், பெரும்பான்மையான இடங்களில் மொட்டுச் சின்னத்திலும், சில இடங்களில் பங்காளிக் கட்சிகளுட னும் சேர்ந்து பயணிக்கக் கூடிய சூழ்நிலைகள் இருக்கின்றன.

இம்முறை பாரிய வெற்றியைக் கொண்டு வரக்கூடிய சூழ்நிலை இல்லாவிட்டாலும், குறிப்பிட்ட தொகுதிகளில் எம்மால் மாற்றங்களைக் கொண்ண்டு வர முடியும்.

சமகால அரசின் வாக்குறுதிகள் மற்றும் செயற்பாடுகளில் அதிருப்தியடைந்துள்ள மக்கள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் செயற்பாடுகளை ஏற்றுக்கொண்டு அவர்களைத் தெரிவு செய்யக்கூடிய சூழல் களத்தில் காணப்படுகின்றது." – என்றார்.





### ரணிலின்...

இருந்து நன்றாகத் தெரிகின்றது. இவ்வாறு போனால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. இவ்வாறே போனால் மற்றுமொரு கடன் மறுசீரமைப்புக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்படும்.

குறுகிய காலத்தில் மூன்றாவது முறையாக மக்கள் அபிப்பிராயத்தை கேட்கும் தேர்தல் வரப்போகின்றது. இந்தத் தேர்தலுக்கு மத்தியில் அரச ஊழியர்களால் சரியான தீர்மானத்தை எடுக்க முடியும்.

ஐக்கிய மக்கள் சக்தி எப்போதும் தொழிலாளர்களையும் உழைக்கும் மக்களையும் பாதுகாக்கும். உழைக்கும் மக்கள் இல்லாமல் ஒரு நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியாது. அவர்களை மறந்து நடக்க முடியாது." – என்றார்.



# நெடுந்தீவின் நிலைமைகளை நேரில் ஆராய்ந்த வடக்கு ஆளுநர்

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் நெடுந்தீவில் அமைக்கப்பட்டுவரும் கலப்பு மின்உற்பத்தி நிலையத்தின் கட்டுமானங்களை நேற்றுமுன்தினம் புதன்கிழமை பார்வையிட்டதுடன், நெடுந்தீவின் பல்வேறு பகுதிகளுக்கும் நேரில் சென்று நிலைமைகளை ஆராய்ந்தார்.

நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட மக்கள் குறைகேள் சந்திப்பில் பங்குகொள்வதற்காக ஆளுநர் நெடுந்தீவுக்குச் சென்றிருந்தார். இதன்போது மாவிலித்துறை – பெரியதுறை வீதியில் ஒரு பகுதி திருத்தம் செய்யப்பட்டுள்ள நிலையில் எஞ்சிய பகுதி மிக மோசமாகப் பயன்படுத்த முடியாத நிலைமை இருப்பதை ஆளுநர் நேரில் சென்று பார்வையிட்டார்.

மாகாண குறித்தொதுக்கப்பட்ட நன்கொடை நிதியிலும், வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ள விசேட வீதி அபிவிருத்தித் திட்டத்திலும், சுற்றுலா அதிகார சபையின் நிதி உதவியின் கீழும் அந்த வீதி முழுமையாகத் திருத்தப்படவுள்ளது என்று வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் எந்திரி.வ.ஜெகானந்தன் ஆளுநரிடம் தெரிவித்தார்.

வீதிப் போக்குவரத்துக்கு இடையூறாக அமைந்துள்ள பற்றைகளை அகற்ற உடன் நடவடிக்கை எடுக்குமாறு ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

கடந்த காலத்தில் சௌபாக்கியா உற்பத்திக் கிராமம் திட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட பனம் கள் போத்தலில் அடைக்கும் நிலையத்தையும் ஆளுநர் பார்வையிட்டார்.

மதுவரி அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாமையால் போத்தலில் அடைக்கும் நிலையத்தின் பணி தொடர்ந்து முன்னெடுக்க முடியாத நிலைமை இருப்பது ஆளுநருக்குச் சுட்டிக்காட்டப்பட்டது.

நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாசாலை, நெடுந்தீவு றோமன் கத்தோலிக்கப் பெண்கள் பாடசாலை, நெடுந்தீவு மகா வித்தியாலயம் என்பனவற்றையும் ஆளுநர் பார்வையிட்டார்.

பாடசாலைகளின் குறைபாடுகள் தொடர்பிலும் அவர் கேட்டறிந்துகொண்டார்.

நெடுந்தீவு றோமன் கத்தோலிக்கப் பெண்கள் பாடசாலையின் ஆரம்பப் பிரிவுக்குப் புதிய கட்டடம் அமைப்பதற்கு மாகாண குறித்தொதுக்கப்பட்ட நன்கொடை நிதியில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஆளுநருக்கு, வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் ம.பற்றிக் டிறஞ்சன் தெரியப்படுத்தினார். அதேபோன்று ஏனைய பாடசாலைகளின் கட்டடங்களின் திருத்த வேலைக்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஆசிரிய விடுதிகள் அமைப்பதற்குப் பதிலாக, நெடுந்தீவிலுள்ள வீடுகளை நீண்டகால குத்தகை அடிப்படையில் பயன்படுத்துவது தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டது.

இதேவேளை, நெடுந்தீவிலுள்ள கால்நடை வைத்திய அதிகாரி பணிமனையில் வைத்து, மாகாண குறித்தொதுக்கப்பட்ட நன்கொடையில் கோழி வளர்ப்புக்காக தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு கோழிக் குஞ்சு வழங்கும் நிகழ்விலும் ஆளுநர் கலந்துகொண்டார்.

அத்துடன் வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சால் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு உதவி வழங்கும் நிகழ்விலும் ஆளுநர் பங்கேற்றார்.

நெடுந்தீவில் மதுபானசாலை அனுமதிப் பத்திரத்தை புதிப்பதற்கு அனுமதி வழங்க வேண்டாம் எனக் கோரி அந்தப் பிரதேச மக்கள் ஆளுநரை நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் வைத்துச் சந்தித்து முறையிட்டனர்.

அவ்வாறானதொரு நிலைப்பாட்டிலேயே உள்ளதாக ஆளுநர் குறிப்பிட்டார்.

ஆளுநரின் இந்தப் பயணத்தின் போது வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன் உட்பட வடக்கு மாகாண அமைச்சுக்களின் செயலர்கள், திணைக்களத் தலைவர்கள் இணைந்திருந்தனர்.









# திடீரென முறிந்து கழன்ற பஸ் சில்லு! மயிரிழையில் உயிர் தப்பிய பயணிகள்!!

(ராமு தனராஜா)

பண்டாரவளை பகுதியில் இ.போ.ச. பஸ் ஒன்று பயணித்துக்கொண்டிருக்கையில் சில்லு திடீரென முறிந்து கழன்றுள்ளது. எனினும், தெய்வாதீனமாக பாதிப்பு எதுவும் இன்றி பயணிகள் தப்பியுள்ளனர்.

இன்று காலை 7.30 மணியளவிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பண்டாரவளை டிப்போவுக்குரிய குறித்த பஸ், இன்று காலை நெலுவ செஞ்ஜோமிஸ் கீழ் பிரிவில் பயணித்துக்கொண்டிருக்கையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நெருக்கமான வளைவுகளையும், பாரிய பள்ளதாக்கையும் உடைய குறித்த பகுதியூடாக பஸ் பயணிக்கையில், திடீரென சில் முறிந்தமை பயணிகளை அச்சத்தில் ஆழ்த்தியது.

பஸ்ஸில் பாடசாலை மாணவர்கள், வேலைக்குச் செல்லும் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் பயணித்துள்ளனர்.

குறித்த வீதி ஆபத்தானது என்பதால், பயணிகள் மயிரிழையிலேயே உயிர்தப்பியுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

எனவே, பஸ் தனது பயணத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் அது பயணத்துக்கு ஏற்ற வகையில் உள்ளதா என்பதை சாரதிகள், நடத்துனர்கள் மற்றும் டிப்போ அதிகாரிகள் பரிசோதிக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.






## நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# சிறுவர் துஷ்பிரயோகம்

இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான முறைப்பாடுகள் கவலையளிக்கும் வகையில் அதிகரித்துள்ளன. இது, அவசர கவனம் செலுத்தப்பட வேண்டிய சிக்கல் ஒன்று வேகமாக வளர்ந்து வருகின்ற நெருக்கடியை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. வளமான கலாச்சாரம், பெருமை மிகு பாரம்பரியம் மற்றும் வலுவான சமூக விழுமியங்களுக்குப் பெயர் பெற்ற ஒரு நாடு, தற்போது அதிகரித்து வரும் குழந்தைகளுக்கு எதிரான முறையற்ற கொடூரம் மற்றும் வன்முறைப் போக்குகளின் கடுமையான யதார்த்தத்தை எதிர்கொள்கிறது.

- இது இலங்கை தொடர்பான சுயாதீன நோக்கர் ஒருவரின் அவதானிப்புக் கணிப்பாக உள்ளது.

பல்வேறு குழந்தைகள் நல அமைப்புகளின் அறிக்கைகள், நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில் துஷ்பிரயோகத்தின் ஒரு வடிவத்தை தெளிவாக வெளிப்படுத்தியுள்ளன.

அனைத்து வயதுக் குழந்தைகளும் புறக்கணிப்பு, உடல் ரீதியான தீங்கு மற்றும் சுரண்டலுக்கு பலியாகின்றனர். முறைப்பாடுகளின் இந்த அதிகரிப்பு, வலுவான பாதுகாப்பு நடவடிக்கைகள், சிறந்த விழிப்புணர்வு மற்றும் சமூகத்தின் மிகவும் பாதிக்கப்படக்கூடிய உறுப்பினர்களைப் பாதுகாப்பதற்கான மிகவும் முன்னெச்சரிக்கை அணுகுமுறை ஆகியவற்றின் அவசரத் தேவையை எடுத்துக்காட்டுகிறது.

தேசிய குழந்தைகள் பாதுகாப்பு ஆணையம் சமீபத்தில் 2024 ஆம் ஆண்டில் நாடு முழுவதும் குழந்தை துஷ்பிரயோகம் தொடர்பான வழக்குகள் மற்றும் தொடர்புடைய முறைப்பாடுகள் குறித்து அதிர்ச்சி தரும் புள்ளிவிவரங்களை வெளியிட்டது.

முறைப்பாடு செய்யப்பட்ட பல்வேறு வகையான குற்றங்கள் மற்றும் துஷ்பிரயோகங்களில், குழந்தைகளுக்கு எதிரான கொடுமைப்படுத்தல் என்பது மிகவும் பரவலாக உள்ளது. கொடுமைப்படுத்தல் தொடர்பாக 1,950 புகார்கள் கடந்த ஆண்டில் பதிவாகியுள்ளன. இதற்கு அடுத்தபடியாக கவனிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள் சம்பந்தப்பட்ட 2,756 முறைப்பாடுகள் இருந்தன. பாலியல் துன்புறுத்தல் தொடர்பில் 580 முறைப்பாடுகள்கள் மற்றும் கடுமையான பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பில் 321 முறைப்பாடுகளும் அறிக்கையிடப்பட்டுள்ளமை கவலையளிக்கின்றது. குழந்தைத் தொழிலாளர் தொடர்பில் 165 முறைப்பாடுகளும், குழந்தை கடத்தல் தொடர்பில் 24 முறைப்பாடுகளும் மற்றும் தகாத உறவுகள் குறித்து 10 முறைப்பாடுகளும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

கட்டாயக் கல்வி மீறல்கள் பிரச்சினைகள் தொடர்பில் 1,628 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. இது குழந்தைகளின் கல்வி உரிமையை உறுதி செய்வதில் முறையான சவால்களைச் சுட்டிக்காட்டுகிறது.

சிறுவர் துஷ்பிரயோக வழக்குகள் மற்றும் முறைப்பாடுகள் கொழும்பில் தான் அதிக எண்ணிக்கையில் பதிவாகியுள்ளன. அங்கு கடந்த ஆண்டில் குறைந்தது 870 சம்பவங்கள் இலம்பெற்றுள்ளன.

அதைத் தொடர்ந்து கம்பஹாவில் 820 சம்பவங்களும், குருநாகலில் 600 சம்பவங்களும் பதிவாகியுள்ளன. இரத்தினபுரி (466 சம்பவங்கள்) மற்றும் அனுராதபுரம் (477 சம்பவங்கள்) உள்ளிட்ட பிற மாவட்டங்களிலும் குறிப் பிடத்தக்க எண்ணிக்கையில் முறைப்பா டுகள் பதிவாகியுள்ளன.

இந்த அதிர்ச்சி தரும் புள்ளி விவரங்கள் குழந்தைகளுக்கான வலுவான பாதுகாப்பு வழிமுறைகளுக்கான அவசரத் தேவையை பிரதிபலிக்கின்றன.

மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனத்தின்படி, குழந்தைதுஷ்பிரயோகம் என்பது உடல் மற்றும் மன ரீதியான தீங்குகள் மட்டுமல்ல. அதற்கும் அப்பாற்பட்டும் உண்டு.

குழந்தையின் அத்தியாவசியத் தேவைகளான உடல் மற்றும் உணர்வு ரீதியானவற்றைப் புறக்கணிப்பதும் இதில் அடங்கும். இந்தத் தேவைகளை வழங்கத் தவறுவது அவர்களின் உரிமைகளை மீறுவதாகும் என்று சுட்டப்படுகின்றது.

குழந்தைதுஷ்பிரயோக வழக்குகளைத் தீர்ப்பதில் ஒரு முக்கிய பிரச்சினை சட்டச் செயல்பாட்டில் ஏற்படும் அதிகப்படியான தாமதமாகும்.

இவற்றையெல்லாம் நாடு எப்படித் தாண்டி வரப்போகின்றது என்பது பெரும் கேள்விக் குறியே.





# தையல் பயிற்சி மாணவர்களின் கண்காட்சி அட்டாளைச்சேனையில்

(எம். எப். நவாஸ் )

அட்டாளைச்சேனை மற்றும் இறக்காமம் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட தையல் பயிற்சி கண்காட்சி அட்டாளைச்சேனை – 03 ஆம் பிரிவு கிராம அபிவிருத்தி சங்க கேட்போர் கூடத்தில் அட்டாளைச்சேனை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் நஹிஜா முஸாபிர் தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக மாகாண பணிப்பாளர் கெ.இளங்குமுதன், கௌரவ அதிதியாக இறக்காம பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம்.றஸ்ஸான், மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் என். தனஜயன், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சட்டத்தரணி ஏ. ஜி. மபாஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

தையல் ஆசிரியர்கள், பயிற்சி மாணவிகளும் கலந்து கொண்டனர்.



பயிற்சி முடித்த மாணவிகளுக்கு சான்றிதழ் வழங்கி வைத்துடன் அதிதியாக கலந்து கொண்டவர்களுக்கு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

# ‘கலாநேத்திரா’ விருதுக்கு விண்ணப்பம் கோருகிறது வவுனியா பிரதேச செயலகம்!

(கி.வசந்தன்)

வவுனியா பிரதேச செயலகத்தின் கலாநேத்ரா விருதுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

வவுனியா பிரதேச செயலகமும், கலாசார பேரவையும் இணைந்து வழங்கும் ‘கலாநேத்ரா’– 2025 விருதுக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரர் வவுனியா பிரதேச செயலக பிரிவை நிரந்தர வதிவிடமாக கொண்டிருப்பதுடன், 25 வயதுக்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்.

துறைசார்ந்த ஆவணப் பிரதிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டுத் தேவை ஏற்படும் பட்சத்தில் விண்ணப்பதாரி நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார். கடந்த காலங்களில் பிரதேச விருது பெற்ற கலைஞர்கள் மீளவும் விண்ணப்பிக்க முடியாது. குறித்த துறையில் 40 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள் விருதுத் தெரிவுக்குள் உள்வாங்கப்படுவர்.

விண்ணப்பங்களை எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச கலாசார உத்தியோகத்தரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இந்த முறை சிறுகதை, கவிதை, நாவல், கட்டுரை, நாடக எழுத்துரு, இசை (சாஸ்திரிய இசை, பண்ணிசை, ஆக்க இசை, மெல்லிசை), மரபுக்கலை (நாட்டுக்கூத்து, வில்லுப்பாட்டு, நாடக ஆற்றுகை, சிற்பம், ஓவியம், பரதம், வாத்திய இசை (வயலின், வீணை, புல்லாங்குழல், ஆர்மோனியம், மிருதங்கம், தபேலா, கடம், முகர்சிங், ஓர்கன் போன்றன), குறும்படம், இயல் (பேச்சு, விவாதம், பட்டிமன்றம், வழக்காடுமன்றம்), அறிவிப்பு, மரபு இசை (தவில், நாதஸ்வரம், பறை, உடுக்கு), ஊடகம் போன்ன துறைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.







# சந்நிதியான் ஆச்சிரமத்தில் இன்று 23 வாராந்த நிகழ்வாக அருளுரை!

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில், ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வாக இன்று (07) ஆன்மீக அருளுரை இடம்பெற்றது.

"தீக்கூர்ந்த திருமேனியான்" என்ற தொடர் சொற்பொழிவை துன்னாலை தெற்கு அ.த.க. பாடசாலை அதிபர் விஜய குமார் நிகழ்த்தினார்.

இன்று வெள்ளிக்கிழமை இந்த நிகழ்வு காலை 10.45 மணி தொடக்கம் 11.45 மணி வரை இடம்பெற்றது.

நிகழ்வில் புத்தளம் மாவட்டம் மணல் குன்று பிரதேச கருமாரி அம்மன் ஆலய ஸ்தாபகரும், சமூகசேவையாளருமான சு.மகேந்திரன், ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகளின் சேவையைப் பாராட்டி வாழ்த்து மடல் வழங்கிக் கௌரவித்தார்.








# முதியோர்களுக்கான உலர் உணவு அடங்கிய பொதிகள் வழங்கி வைப்பு

(எஸ்.எம்.அறூஸ்)

உலக அவசர நிதி உதவி திட்டத்தின் கீழ் ஹெல்ப் ஏஜ் நிறுவனத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி உதவியின் மூலம் கடந்த ஆண்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அட்டாளைச்சேனை பிரதேச முதியோர்களுக்கான உலர் உணவு மற்றும் அத்தியாவசிய பொருள்கள் அடங்கிய பொதிகள், மாற்று திறனாளிகளுக்கான உபகரணங்கள் என்பன அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பீ.ரி.எம். இர்பான் வழிகாட்டலில் உதவி பிரதேச செயலாளர் நஹீஜா முசாபிர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஹெல்ப் ஏஜ் நிறுவனத்தின் நிகழ்ச்சிதிட்ட தலைவர் எம்.எஸ். சமிந்த டீசில்வா, கிழக்கு மாகாண ஒருங்கிணைப்பாளர் ஜே.எம்.டி. தனஞ்சய பண்டார, நிர்வாக உத்தியோகத்தர் எம்.சலீம், சமூக சேவைகள் உத்தியோகத்தர் ஏ.ஜீ.அர்ஸாத் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

அட்டாளைச்சேனை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த சுமார் 350 பேருக்கு உணவுப் பொருள்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.







# மாமனிதர் கிட்டினர் சிவநேசனின் 17 ஆம் ஆண்டு நினைவேந்தல்!

(எஸ். நிதர்ஷன்)

மாமனிதர் கிட்டினர் சிவநேசனின் 17 ஆம் ஆண்டு நினை வேந்தல் நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக யாழ்ப் பாணத்தில் நேற்று (06) அனுஷ்டிக் கப்பட்டது.



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யின் ஏற்பாட்டில் கட்சியின் யாழ்ப்பாண தலைமைக்அலுவலகத்தில் இந்தநினை வேந்தல் நடைபெற்றது.

கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பின ருமான செல்வராசா கஜேந்திரன் தலைமையில் உணர்வு பூர்வமாக நினைவேந்தல் அனுஷ்டிக்கபட்டது.

இதன்போது பொதுச் சுடர் ஏற்றப் பட்டு மலர்மலை அணி வித்து மலரஞ் சலி செலுத்தப்பட்டது. இந்த நிகழ்வில் கட்சியின் முக்கியஸ்தர்கள், ஆதரவாளர் கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தி னர்.





# கச்சதீவு பெருவிழாவுக்கான ஒத்துழைப்பை பக்தர்கள் அனைவரும் வழங்க வேண்டும்

## யாழ். மாவட்ட செயலகப் பதில் செயலாளர் பிரதீபன் வேண்டுகோள்

(எஸ்.நிதர்ஷன்)

கச்சதீவு பெருவிழாவுக்கான ஒத்துழைப்பை சகல பக்தர்களும் வழங்க வேண்டும் என்று யாழ். மாவட்ட செயலகப் பதில் செயலாளர் மருதலிங்கம் பிரதீபன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா தொடர்பான கலந்துரையாடல் நேற்று (06) யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

திருவிழாவுக்கான ஏற்பாடுகள் குறித்து துறைசார் தரப்பினருடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்தத் தெரிவித்தபோதே யாழ். மாவட்ட பதில் செயலாளர் இதனை தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு,

எங்களால் வழங்கப்படும் படிவத்தை பூர்த்தி செய்து கச்சதீவில் சமர்ப்பிப்பதன் மூலம் தமது பதிவுகளை பக்தர்கள் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

இதேநேரம், பஸ் போக்குவரத்து சேவையை முன்னெடுக்க இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் பஸ் சேவையில் ஈடுபடும் தரப்பினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் கடற்போக்குவரத்து சேவைக்கான கட்டணங்களும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக நெடுந்தீவில் இருந்து கச்சதீவுக்கான ஒரு வழி போக்குவரத்து கட்டடணமாக 1000 ரூபாவும், குறிகட்டுவானிலிருந்து ஒரு வழி போக்குவரத்து கட்டடணமாக 1300 ரூபாவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப பயணம் செய்யும் படகுகள் பரிசோதனை செய்யப்பட இருக்கின்றன.

உணவு, தங்குமிட வசதிகள் கடற்படையினர் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. நெடுந்தீவு பிரதேச செயலகம், நெடுந்தீவு பிரதேச சபை ஆகியவை அந்த பணிகளில் பங்களிக்கும். ஆலய சூழல் துப்பரவு செய்யப்பட்டுள்ளது. அதற்கு உரிய வேலைத் திட்டங்கள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த முறை விசேடமாக 25 சாரணர்கள் கச்சதீவு ஆலய பணிகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். அந்த வகையில் அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

பக்தர்கள் சரியான அறிவுறுத்தலை பின்பற்றி கச்சதீவு திருவிழாவில் கலந்து கொள்வதன் மூலம் வீணான அசௌகரியங்களை தவிர்த்துக் கொள்ள முடியும்.

உத்தியோக பூர்வமாக நாங்கள் குறிகட்டுவானில் இருந்து பக்தர்கள் கலந்து கொள்வதற்கான அறிவித்தலை வழங்கி இருக்கின்றோம். இருந்தாலும் சிலர் இலங்கையின் வேறு பிரதேசங்களில் இருந்து நேரடியாகவர வாய்ப்பு இருக்கிறது. அவர்களிடம் நாம் வினயமாக கேட்டுக்கொள்வது, முறையாக அந்தந்த பகுதி பங்குகள் மூலம் அறிவுறுத்தலை வழங்கி அந்த இடத்துக்கு வரும் பொழுது அதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை கடற்படையினரால் செய்ய முடியும்.

பெருந்திருவிழாவுக்கு இந்த முறை இந்தியாவில் இருந்து 4 ஆயிரம் யாத்திரிகர்களுக்கும் இலங்கையின் 4 ஆயிரம் யாத்திரிகர்களுக்கும் அனுமதி வழங்கப்படவுள்ளது. இரு நாடுகளதும் அதிகாரிகள் மற்றும் சேவையாளர்கள் என ஆயிரம் பேர் வருகைதரவுள்ளனர். மொத்தமாக 9 ஆயிரம் பேர் வருகைதரவுள்ளனர்.

அந்தவகையில் குறித்த பெருந்திருவிழாவுக்கு வருகைதரவுள்ளவர்கள், ஏற்பாட்டாளர்களால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி எதுவித இடையூறுகளும் இன்றி கலந்து கொள்ளவேண்டும். – என்றார்.




# அச்சுவேலி கைத்தொழில் பேட்டைக்கு அமைச்சர் சுனில் ஹிந்துக் நெத்தி!

(எஸ். நிதர்ஷன்)

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையைக் கைத்தொழில் அமைச்சர் சுனில் ஹிந்துக் நெத்தி இன்று (07) பார்வையிட்டார்.

கைத்தொழில் துறையை மேம்படுத்தும் நோக்கில் குறித்த இடத்துக்கு விஜய மேற்கொண்டார்.

இதன்போது அச்சுவேலியில் இயங்கி வரும் மரக்கறி எண்ணை உற்பத்தி செய்யும் நிலையத்தையும் பார்வையிட்டு அதன் செயற்பாடுகள் தொடர்பில் ஊழியர்களுடன் கலந்து ரையாடினார்.

இதன்போது கடல்தொழில் அமைச்சர் இ.சந்திரசேகர், நிதி திட்டமிடல் பிரதி அமைச்சர் ஹர்சன சூரிய பெரும, நாடாளுமன்ற உறுப்பினர்களான இளங்குமரன், ஶ்ரீபவானந்தராஜா, யாழ்ப்பாண மாவட்ட பதில் அரச அதிபர் ம.பிரதீபன், கோப்பாய் பிரதேச செயலர் சிவஸ்ரீ உள்ளடோர் கலந்து கொண்டனர்.

இதன் போது கருத்து தெரிவித்த அமைச்சர் சுனில் ஹிந்துக்நெத்தி,

அனைத்து கைத்தொழில் நிலையங்களையும் மேம்படுத்தி அவற்றின் வினைத்திறனை அதிகரிக்கும் நோக்கில் குறித்த களப்பணி இடம்பெற்று வருகிறது.

வெளிநாட்டு முதலீட்டாளர்கள், உள்நாட்டு முதலீட்டாளர்கள் இன, மத, மொழி பேதங்களைக் கடந்து அனைவரையும் உள்வாங்கி பாரிய தொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்கு தாம் தயாராக உள்ளோம்.– என்றார்.











# முன்னாள் எம்.பி. மாமனிதர் சிவநேசனை சபையில் நினைவு கூர்ந்த கஜேந்திரகுமார்!

## *ஊடகத் துறையினரான பாரதி, சாமிக்கும் அஞ்சலி!!*

இன்று இந்த அவையின் மறைந்த முன்னாள் உறுப்பினர் மாமனிதர் சிவநேசனின் 17 ஆவது ஆண்டு நினைவு நாளாகும். மாமனிதர் சிவனேசன் கிளைமோர் தாக்குதல் மூலம் இராணுவத்தினரால் கொல்லப்பட்டார். அவருக்கு எனது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊடக அமைச்சு குறித்தும் நாங்கள் விவாதித்து வருகிறோம். தமிழ் ஊடக உலகம் இரண்டு தனித்துவமானவர்களை இழந்துள்ளது. தினக்குரல் நிறுவனர் எஸ்.பி. சாமி மற்றும் தினக்குரல் ஞாயிறு பதிப்பின் ஆசிரியராகவும் பின்னர் வீரகேசரி பத்திரிகையின் ஆசிரியராகவும் பணியாற்றிய பாரதி இராசநாயகம் ஆகியோருக்கும் எனது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

நேற்று (06) நாடாளுமன்றில் நடைபெற்ற வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் நடைபெற்ற சுகாதார அமைச்சு மற்றும் ஊடகங்கள் தொடர்பான விடயதானத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உரையாற்றும் போது இந்த அஞ்சலியைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது,

யாழ். போதனா மருத்துவமனையின் பணிப்பாளரால் கடிதம் ஒன்று எனக்கு வழங்கப்பட்டது. (அந்தக் கடிதத்தை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவிடமும் அவர் சமர்ப்பித்திருந்தார்.) நான் அதன் பிரதியை உங்களுக்கு வழங்குவேன். அந்தக் கடிதம் மிகவும் விரிவான கடிதமாகும். அதில் ஆளணி மதிப்பாய்வு மற்றும் பல்வேறு தரவுகள் உள்ளன. அந்த விடயத்துக்குள் செல்வதற்கு போதிய நேரம் இல்லாததால் நான் அந்த விடயத்துக்குள் செல்லவில்லை.

இக்கடிதத்தின் மூலம் பணிப்பாளர் உள்கட்டமைப்பு மேம்பாட்டைக் கேட்கிறார். குறிப்பாக அவர் ஒரு புதிய மகப்பேறு பிரிவு, இருதயவியல், இருதய மார்பு பிரிவு. உள்ளிட்ட மேம்பட்ட சிகிச்சைகளுக்கான சிறப்புப் பிரிவு மற்றும் 30இற்கும் மேற்பட்ட சிகிச்சை உள்கட்டமைப்பு வசதிகள் தேவை என்று தெரிவித்துள்ளார். இதில் குறிப்பிட்ட



நான்கு விடயங்களில் ஒரு விடயம் தொடர்பாக உங்கள் விசேட கவனத்தை ஈர்க்க விரும்புகின்றேன்.

யாழ்ப்பாண போதனா மருத்துவமனையில் உள்ள மகப்பேறு விடுதி 2012 இல் பாழடைந்தமையால் அழிக்கப்பட்டது. அதன் பின்னர் நான்கு விடுதிகளுக்கு உரிய இடத்தில் 16 விடுதிகள் இப்போது செயல்பட்டு வருகின்றன. நீங்கள் அந்த அலகுக்குச் சென்றால், தாய்மார்கள் தரையில் தூங்கும் ஒரு பயங்கரமான சூழ்நிலையை அவதானிக்கலாம். முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாத இடத்தில் தற்போதைய விடுதி உள்ளது.. பெரிய அறுவை சிகிச்சைகளுக்குப் பின்னர் ஐசியு வில் பராமரிக்கப்படும் தங்கள் குழந்தைகளுக்குப் பாலூட்டுவதற்குத் தாய்மார் கிட்டத்தட்ட 20 நிமிடங்கள் நடந்து செல்லவேண்டும். இது முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாததாகும்.

இந்த விடயத்துக்கு நீங்கள் முன்னுரிமையளிக்க வேண்டும். இந்த விடயங்களை அவதானித்து மகப்பேற்று விடுதி தொடர்பாக உடனடியாக செயற்படுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

யாழ்ப்பாண போதனா மருத்துவமனை நாட்டின் நான்காவது தேசிய மருத்துவமனையாக உள்ள நிலையில், அதனை விரிவாக்குவதற்குப் பணிப்பாளரால் நிலவசதி கேட்கப்பட்டுள்ளது.. மீனாட்சி அம்மன் வீதியில் உள்ள யாழ்ப்பாண போதனா மருத்துவமனைக்கு சொந்தமான நிலம் பாதுகாப்புப் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. எனவே அவர் அந்த நிலத்தை மருத்துவமனைக்குத் திருப்பித் தருமாறு கேட்கிறார். மணிக்கூண்டுக் கோபுர வீதியில் அமைந்துள்ள கட்டடப் பொருள்கள் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான நிலத்தையும் அவர் கேட்டுள்ளார். எனவே இவை தொடர்பாக நீங்கள் கவனம் செலுத்த வேண்டும்.

இரண்டாவது முக்கியமாக பிரச்சினையாக குறிப்பிட விரும்புவது தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவமனை பற்றியதாகும். தெல்லிப்பழைபுற்றுநோய் மருத்துவமனை, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் புற்றுநோய் பிரிவின் பணியாளர்களைக் கொண்டிருந்தாலும், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை மற்றும் போதனா மருத்துவமனையின் கீழ் வரும் புற்றுநோய் பிரிவு ஆகிய இரண்டும் அடிப்படையில் வெவ்வேறானவை.

எனவே அங்குள்ள மருத்துவர்கள் தங்கள் சேவைகளை பயனுள்ளதாக வழங்குவதற்கு உரிய பரிந்துரைகளை எதிர்பார்க்கிறார்கள். அவர்களின் கூற்றுப்படி புற்றுநோய் பிரிவு சேவைகளை நிர்வகிப்பதற்கென தனி பணிப்பாளர் மற்றும் கணக்காளர் தனி மேட்ரன் தேவையென எதிர்பார்க்கிறார்கள். புற்றுநோய் சேவைகளை நிர்வகிக்கும் அனைத்து ஊழியர்களும் ஒரே நிர்வாகத்தின் கீழ் இருக்க வேண்டும். நிதியுதவி தொடர்பாக அவர்கள் கேட்பதும் இதுதான். புற்றுநோய் சேவைகளுக்கு தனித்தனி நிதி ஒதுக்கீடு அவசியமாகும். ஆதார வைத்தியசாலை மற்றும் போதனா மருத்துவமனை இரண்டுக்கும் இடையே வேறுபாடுகள் உள்ளன. எனவே அவர்களுக்கு தனியாக நிதி ஒதுக்க வேண்டும் என்று கேட்கிறார்கள்.

மருத்துவமனையில் உள்ள ஆதரவு சேவைகளைப் பொறுத்தவரை, உயர் தர அடிப்படையில் தற்போதுள்ள ஆளணி வெற்றிடங்களை நிரப்ப வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள். நோயியல் நிபுணர் மற்றும் ஆலோசகர், இரத்தவியலாளர்கள் பணியிடங்களுக்கான வெற்றிடங்களை வருடாந்த இடமாற்றத்தின் மூலம் நிரப்ப வேண்டும்.

புற்றுநோய் மருத்துவமனைக்கு சி.ரி. ஸ்கேன் இயந்திரத்தை வழங்க வேண்டும் என்று அவர்கள் மன்றாடுகிறார்கள். சி.ரி. ஸ்கேனர் இல்லாத புற்றுநோய் மருத்துவமனை எப்படி புற்றுநோய் மருத்துவமனையாக இருக்க முடியும் என்று எனக்குப் புரியவில்லை. அமைச்சரே அதையும் நீங்கள் கவனிக்க வேண்டும்.- என்றார்.





# காலில் பிரச்சினைகள் உள்ள நீரிழிவு நோயாளர்களுக்குப் புதிய நம்பிக்கை

## *யாழ்ப்பாணம் ஜெய்ப்பூர் நிலையத்தில் புதிய முன்னெடுப்பு*

யாழ்ப்பாணம் ஜெய்ப்பூர் நிலையமானது 1987 ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வருகின்றது. சிவில் யுத்தத்தின் போது அவயவங்களை இழந்த பலருடைய தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதான நிலையம் ஒன்றுக்கான தேவை இருந்த சூழ்நிலையிலேயே இந்த நிறுவனமானது உருவாக்கப்பட்டது.

அந்த நாள்களில் இருந்து இன்று வரையிலும் யுத்தத்தாலும் விபத்துக்கள் மூலமாகவும் அல்லது நீரிழிவு பாதத் தொற்று நோய்களாலும் பாதிக்கப்பட்ட பலருக்கு செயற்கைக் கால்கள், நடமாடுவதற்கான உபகரணங்கள் ஆகியவற்றை வழங்கி வருகின்றது.

பிறப்பிலேயே பெருமூளை வாதம் முதலான பிரச்சினைகளைக் கொண்ட சிறு பிள்ளைகளுக்காகவும் சேவையாற்றி வருகின்றது.

குணமடையாத கால் புண்கள் அல்லது காலில் சிதைவுகள் ஆகியவற்றால் பாதிக்கப்படுபவர்களுக்கான பிரத்தியேகமான காலணிகளை வடிவமைப்பதற்கான மிக அடிப்படையான இயலுமையே காணப்பட்டது.

நீரிழிவு அல்லது குறைபாடுடைய சுற்றோட்டம் ஆகியவற்றின் மூலம் உருவான குணமடையாத கால் புண்கள் காலை அகற்றும் நிலை அவசியமாகும் சூழ்நிலைக்கு இட்டுச் சென்றிருக்கின்றன.

பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட காலணிகள் மூலமாக நடக்கும் போது காலில் புண்ணுள்ள பகுதியிலிருந்து அழுத்தம் வருவதைத் தடுக்க முடியும். Offiaading என்னும் இது தொழிநுட்பச் செயற்பாட்டின் மூலம் குணமாக்கும் செயற்பாட்டை விரைவுபடுத்த முடியும் என்பதோடு காலை அகற்றும் நிலைமை ஏற்படாமலும் தடுக்க முடியும்.

இந்தியாவின் வேலூர் கிறிஸ்தவக் கல்லூரியானது அதன் அகச்சுரப்பியல் பிரிவின் தலைமையின் கீழ் இத்துறையில் ஒரு முன்னோடியாகத் திகழ்ந்து வருகிறது. அவர்களுடைய செயற்கை உறுப்பு மற்றும் சார்பு உறுப்புத் தயாரிப்புப் பிரிவுகளானவை நீண்ட காலமாக இவ்வாறான தனிப்பட்டு வடிவமைக்கப்பட்ட பாதணிகளை உருவாக்கி வருகின்றன.

2024 ஆம் ஆண்டு பேராசிரியர் பீலிக்ஸ் ஜெபசிங் யாழ்ப்பாணம் ஜெய்ப்பூர் நிலையத்துக்கு வருகை தந்ததன் பின்னராக வேலூர் கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரியின் செயற்கை உறுப்பு மற்றும் சார்பு உறுப்புத் தயாரிப்புப் பிரிவுகளில் இருந்து இருவரை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி அங்கு தனிப்பட்டு வடிவமைக்கப்பட்ட காவணிகளைத் தயாரிப்பதற்கான பயிற்சியை ஒரு வார காலத்துக்கு வழங்குவதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது.

பயிற்சியளித்து இத்துறையில் அவர்களின் திறன்களை மேலும் விருத்தி செய்தலே வேலூர் கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரியுடனான கூட்டிணைவின் அடுத்த கட்டமாக அமையவுள்ளது.

இந்தக் கூட்டிணைவானது வேலூர் கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரியின் அகச்சுரப்பியல் துறை மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் சர்வதேச மருத்துவ சுகாதார நிறுவனம் (IMuO) ஆகியவற்றின் அனுசரணையிலேயே சாத்தியமாகியது. அவர்களுக்கு எங்களது மனமார்ந்த நன்றிகள்.

யாழ்ப்பாணம் ஜெய்ப்பூர் நிலையமானது காற்புண்கள் மற்றும் சிதைவுகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கான தனிப்பட்டு வடிவமைக்கப்பட்ட காலணிகளை வழங்குவதற்கும் அத்துடன் நீரிழிவு நோயாளிகளுக்கான பாதுகாப்பான காலணிகளை வழங்குவதற்கும் தற்போது தயாராகியுள்ளது. இதன் மூலம் சமூகத்துக்கான முக்கியமான மற்றும் தொடர்ச்சியான தனது சமூகப் பங்களிப்பை விரிவுபடுத்தியுள்ளது.

தேவையுடையவர்கள் 021 222 2574 இலக்கத்தில் வைத்திய கலாநிதி தயாளன் அம்பலவாணருடன் தொடர்பு கொள்ள முடியும். ஜெய்ப்பூர் நிலையத்துக்கு வருகை தர முன்னர் வைத்திய அதிகாரி ஒருவரின் பரிந்துரையைப் பெற்றிருக்க வேண்டியது அவசியமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ஒலுவில் துறைமுகத்தை அபிவிருத்தி செய்தால் அம்பாறை மீனவர்களின் வாழ்வாதாரம் மேம்படும்

## *நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவிப்பு*

ஒலுவில் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதன் மூலம் அம்பாறை மாவட்ட மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியும் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் (05) இடம்பெற்ற 2025 ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தில் கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு, கடற்றொழில், நீரியல் வளங்கள் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு ஆகியவற்றின் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு,

இன்றைய தினம் முக்கியமான இரண்டு அமைச்சுக்களுடைய விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதில் குறிப்பாக. கிராமிய அபிவிருத்தி சம்பந்தமாக பல நல்ல கருத்துக்கள் இந்த சபையில் முன்வைக்கப்பட்டிருக்கின்றன.அவற்றை விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் நடைமுறைப்படுத்த வேண்டும்.

கடந்த அரசுகள் ஜனசக்தி, ஜனசவிய, சமுர்த்தி இப்பொழுது அஸ்வெசும போன்ற தலைப்பில் வறுமையைப் போக்குவதற்காகப் பல திட்டங்களைக் கொண்டுவந்தாலும் வறுமைக் கோட்டுக்குக் கீழ் இருப்பவர்கள் அப்படியேதான் இருக்கின்றார்கள். அதிகமான திட்டங்கள் அரசியல் மயப்படுத்தப்பட்டதாக இருந்ததும் இதனுடைய முன்னேற்றமின்மைக்கான காரணமாக நாங்கள் பார்க்கிறோம்.

அஸ்வெசும திட்டத்தை கடந்த அரசு ஆரம்பித்தது. இப்பொழுது இந்த அரசும் அதை முன்னெடுத்துச் செல்கின்றது. கடந்த அரசு அதை ஆரம்பிக்கும்போது, தகுதியானவர்களைத் தெரிவுசெய்யும் விடயத்தில் தவறிழைத்திருக்கிறது.

பல்லாயிரக்கணக்கான சமுர்த்தி அதிகாரிகள் இருந்தபோதும், அஸ்வெசும திட்டத்தை வேறொரு திட்டம் போன்று கொண்டுவந்து, தகுதியான பலர் இருக்க, தகுதி இல்லாத பலர் அதனை பெறும் ஒரு துர்ப்பாக்கிய நிலையை எமது மாவட்டங்களில் காணக் கூடியதாக இருந்தது. எனவே, எதிர்காலத்திலாவது அதில் மாற்றங்களை கொண்டுவர வேண்டும் என்று நாங்கள் அரசிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

இந்த அஸ்வெசும திட்டத்தை சமுர்த்தி வங்கிகளில் பயன்படுத்த முடியும். 1083 சமுர்த்தி வங்கிகள் இருக்கின்றன. அந்த வங்கிகளின் ஊடாக இந்தத் திட்டத்தை வழங்கலாம். அந்த வங்கிகளை பயன்படுத்துகின்றபோது, மக்களுக்கும்



இலகுவாக இருக்கும். அதனால் அந்த சமுர்த்தி வங்கிகளும் பயனடையும். புதிய புதிய வங்கிகளெல்லாம் நவீனமயப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தாலும், சமுர்த்தி வங்கிகள் நவீன மயப்படுத்தப்படவில்லை. எனவே, அந்த விடயத்திலும் அரசு கவனம் செலுத்த வேண்டும்.

1994ஆம் ஆண்டு சேவைக்கு வந்த சமுர்த்தி அதிகாரிகளுக்கு, 30 வருடங்களாக இதுவரையில் பதவி உயர்வுகள் கிடையாது. அவர்களுக்குப் பிறகு நியமனம் பெற்ற பல திணைக்கள அதிகாரிகள், உத்தியோகத்தர்களுக்குக் காலத்துக்குக் காலம் பதவி உயர்வுகள் கிடைக்கின்ற போதும், இந்த அதிகாரிகளுக்கு எந்தவொரு பதவி உயர்வுகளும் இதுவரையில் இல்லை. அவர்கள் ஓய்வுபெற்றுச் செல்கின்ற வேளையிலும் அதே நிலையில் இருந்துதான் செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது. இது தொடர்பிலும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

நடைமுறைப்படுத்தப்படுகின்ற அஸ்வெசும திட்டத்தில், இன்னும் அதிகமானவர்களை உள்வாங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வன்னி மாவட்டத்தில் கடந்த காலங்களில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள், ஊனமுற்றவர்கள், பெண் தலைமைத்துவத்தைக் கொண்டவர்கள் என பலர் இருக்கின்றார்கள். அவ்வாறான பாதிக்கப்பட்ட மக்களால் தொழில் செய்ய முடியாத நிலை மற்றும் அவர்களின் பிள்ளைகளுக்குக் கல்வி கற்க முடியாத துர்ப்பாக்கிய நிலை காணப்படுகிறது. எனவே, இந்த அஸ்வெசும போன்ற திட்டங்கள் வழங்கப்படுகின்ற போது, அவர்கள் முன்னுரிமை அடிப்படையில் உள்வாங்கப்பட வேண்டும். அவர்களும் பயனடையக் கூடிய விசேட திட்டங்களும் முன்வைக்கப்பட வேண்டும்.

அதேபோன்று, மீனவ அமைச்சர் யாழ்ப்பாணத்தில்தான் வாழ்ந்து வருகிறார். மீனவச் சமூகம் எவ்வாறான கஷ்டங்களை எதிர்நோக்குகின்றது என்று அவருக்கு தெரியும். குறிப்பாக, இந்திய ரோலர் படகுகளால் எமது மீனவர்கள் சொல்லொனா துயரங்களை அனுபவித்து வருகின்றனர். எமது நாட்டில் மீனவர்களுக்கு அத்தனை சட்டங்களும் போடப்பட்டிருக்கின்றன. ஆனால். இந்தியாவில் இருந்து வருகின்றவர்கள் அனைத்துச் சட்டங்களையும் மீறி, எமது கரை வரை வந்து அத்தனை மீன்களையும் பிடித்துக் கொண்டு செல்லும் துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது.

அனைத்து அரசுகளும் அமைச்சர்களும் இந்த விடயத்தில் நடவடிக்கை எடுப்போம் என்று கூறி வருகின்றனரே தவிர, எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொண்டதாக நாங்கள் காணவில்லை. எனவே, கடற்படையினருடன் இணைந்து இதனைத் தடுப்பதற்கான இறுக்கமான திட்டத்தை வகுக்கின்றபோது மட்டுமே, இதனைத் தடுத்து நிறுத்த முடியும். இல்லையெனில், எமது மீனவர்கள் தொடர்ந்தும் வறுமைக் கோட்டுக்குக் கீழே செல்லும் ஒரு துர்ப்பாக்கிய நிலையைதான் எதிர்கொள்ள நேரிடும்.

அத்துடன், நன்னீர் மீன்பிடியை வலுப்படுத்துவதற்கு விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக, வடக்கு – கிழக்கு மாகாணங்களில் நன்னீர் மீன்பிடித் துறைக்காக பல நல்ல திட்டங்களை வகுத்துச் செயற்பட முடியும். இந்திய அரசு, இலங்கையில் எக்குவா கல்சர் எக்ஸலண்ட் சென்டர் ஒன்றை மன்னாரில் அமைப்பதற்கு 10 மில்லியன் டொலர்களைத் தருவதாக வாக்குறுதியளித்துள்ளது. அமைச்சர் அவசரமாக அந்த திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற போது, மன்னார் மட்டுமல்ல குறிப்பாக, வடக்கு, கிழக்கு மக்கள் அதனால் பயனடைய முடியும்.

இந்தத் திட்டத்தின் ஊடாக எத்தனையோ நாடுகள் இன்று பொருளாதார ரீதியாக வளம் பெற்றிருக்கின்றது. வியட்நாம் போன்ற நாடுகளில் பெரிய ளவில் பொருளாதாரத்தை பெற்றுக் கொடுக்கும் ஒரு துறையாக இந்தத் துறை காணப்படுகின்றது.

இவ்வாறான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் பட்சத்தில், அது முறையான திட்டமிடலுடன் முன்னெடுக்கப்பட வேண்டும். அரசியல்வாதிகள் மற்றும் ஒருசில அதிகாரிகளின் செல்வாக்கினால், முறையான திட்டமிடல் இல்லாமல் இவ்வாறான திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதனால், சாதாரண மீனவர்கள் பாதிக்கப்படுகின்றார்கள். வெள்ளப் பாதிப்பு ஏற்படுகின்றது. பொதுமக்கள் பாதிக்கப்படுகின்றனர். எனவே, ஒரு நல்ல திட்டமிடலுடன் அவ்வாறான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

இந்திய அரசாங்கம் இலங்கைக்கு நன்கொடையாக இந்தத் திட்டத்தை வழங்கியுள்ளது. அதற்காக நாங்கள் இந்தியாவுக்கு நன்றி செலுத்துகின்றோம். ஆனால், அதை நடைமுறைப்படுத்துவதில் இழுபறி

தொடர்ச்சி▼

# ஒலுவில் துறைமுகத்தை அபிவிருத்தி செய்தால் அம்பாறை மீனவர்களின் வாழ்வாதாரம் மேம்படும்

தொடர்ச்சி▲

நிலை காணப்படுகிறது. எனவே, அவசரமாக அதை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகின்றேன்.

வங்காலை கிராமம் மன்னாரில் இருக்கக்கூடிய ஒரு பெரிய மீன்பிடி கிராமம் ஆகும். இந்த கிராம மக்கள் கடலரிப்பால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அதைத் தடுப்பதற்குச் சுவர் அமைப்பதற்கான நிதியை நாங்கள் கடந்த காலங்களில் ஒதுக்கிக் கொடுத்த போதும், அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் அரச அதிபர்கள், கல்வி அதிகாரிகள் இருக்கக் கூடிய ஒரு கத்தோலிக்க கிராமமான வங்காலை, அழிந்து பேகும் ஒரு ஆபத்தான நிலையை எதிர்கொண்டுள்ளது. அதனைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு மீனவ அமைச்சுக்கு உள்ளது.

மர்ஹூம் அஷ்ரப் அமைச்சராக இருந்தபோது கட்டிய ஒலுவில் துறைமுகம், இன்று மக்களுக்கு பயனற்றதாகியிருக்கின்றது. அந்தத் துறைமுகத்தின் தாக்கம் நிந்தவூர், கல்முனை, திருக்கோயில் போன்ற இன்னோரன்ன பல பகுதிகளில் வாழ்கின்ற மக்களுக்கும் மீனவர்களுக்கும் பாதிப்பாக இருக்கின்றது. ஒலுவில் துறைமுகத்தை கடந்த அரசு இருந்த மீன்பிடி அமைச்சு பொறுப்பேற்றது. இருப்பினும், எவ்வித வேலைத்திட்டத்தையும் செய்ததாக நாங்கள் காணவில்லை.

எனவே, ஒலுவில் துறைமுகம் புனரமைக்கப்பட்டால் மீன்பிடி படகுகளை செலுத்துகின்றவர்கள் பெரிதும் பயனடைவார்கள். கல்முனை, சாய்ந்தமருது, காத்தான்குடி, வாழைச்சேனை, கோறளைப்பற்று போன்ற பகுதிகளில் மீன்பிடிப் படகுகளைச் செலுத்துபவர்கள், தற்போது வாழைச்சேனையில்தான் தங்களுடைய படகுகளை கட்ட வேண்டிய நிலை, மீன்களை விற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், அந்த மீன்களுக்கான நல்ல பெறுமதி கிடைக்கப் பெறுவதில்லை.

எனவே, ஒலுவில் துறைமுகத்தைமீனவர்களுக்கு பயனுள்ளதாக ஆக்கி, அவர்களுடைய படகுகளை கட்டுவதற்கான ஏற்பாடுகளை செய்கின்றபோது, வாழைச்சேனை மற்றும் கல்முனைப் பகுதியை சேர்ந்த இருதரப்பினரும் பயனடைய முடியும். எனவே, அதற்கான நடவடிக்கையை அரசு முன்னெடுக்க வேண்டும்.- என்றார்.

# திருமலை மூதூர் இறால் பாலம் உடைந்து விழும் அபாய நிலை!

## பயணிக்கும் மக்கள் அச்சத்தில்

(முஹம்மது ஜிப்ரான்)

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கட்டைப்பரிச்சான் கணேசபுர பகுதிகளை இணைக்கும் இறால் பாலம் உடைந்து விழும் அபாய நிலையில் உள்ளது.

மூதூர் பிரதேசத்தில் பல இடங்கள் புனர்நிர்மாணம் செய்யப்பட்டாலும் கூட செய்ய வேண்டிய சில பகுதிகள் இன்னும் அப்படியே இருக்கின்றன.

இறால் பாலம் மிக நீண்ட காலமாகச் சேதம் அடைந்த நிலையில் காணப்படுகின்றது. இந்த பாலத்தின் ஊடாகப் பல பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றுவதற்காக இந்தப் பாலத்தின் ஊடாக பயணம் செய்கின்றனர். இந்தப் பிரதேச மக்கள் அடிப்படை வாழ்வாதார பொருளாதார நடவடிக்கைகளுக்கு இந்தப் பாலத்தின் ஊடாகப் பயணிக்கவேண்டியுள்ளது.

மற்றும் பாடசாலை மாணவர்கள், வியாபாரிகள், விவசாயிகள் மற்றும் அரச ஊழியர்கள், நோயாளிகள் பலர் இந்தப் பாலத்தின் ஊடாக சிரமத்துக்கு மத்தியில் சென்று வருகின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் இதனை கவனத்தில் கொண்டு இந்தப் பாலத்தை மக்களின் நலன் கருதி அமைத்துத் தர வேண்டும் என்பது பொது மக்களின் வேண்டுகோளாகும்.







# மாற்று வலுவுள்ளோரது வாகனங்களை பதிந்து சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கல்

(எஸ். நிதர்ஷன்)

மாற்று வலுவுள்ளோர் பயன்படுத்துவதற்கென உள்ளூரில் வடிவமைக்கப்பட்ட வாகனங்களைப் பதிவு செய்து, அவர்களுக்கான சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் நிகழ்வு நேற்று (06) யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

யாழ். மாவட்ட செயலக மோட்டார் போக்குவரத்துப் பிரிவு அலுவலக முன்றலில் குறித்த நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் யாழ். மாவட்ட பதில் செயலாளர் ம.பிரதீபன், மாவட்ட மேலதிக அரச அதிபர் (காணி) சிறீமோகனன், மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# உதயநிதி சனாதன தர்மம் குறித்து சர்ச்சை: புதிய வழக்குகளுக்கு உச்ச நீதிமன்றம் தடை



சனாதன தர்மம் குறித்து சர்ச்சைக் குரிய வகையில் கருத்து தெரிவித்த விவகாரத்தில், தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் மீது புதிதாக வழக்குகள் பதியக்கூடாது என உச்ச நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

சென்னையில் கடந்த 2023 ஆம் ஆண்டு செப்டம்பரில் நடைபெற்ற தமிழக முற்போக்கு எழுத்தாளர் சங்க மாநாட்டில் பங்கேற்று பேசிய துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், சனாதன தர்மம் குறித்து சர்ச்சைக்குரிய வகையில் கருத்து தெரிவித்திருந்தார்.

அதையடுத்து உதயநிதி ஸ்டாலினுக்கு எதிராக மகாராஷ்டிரா, ராஜஸ்தான், பிஹார், கர்நாடகா, ஜம்மு காஷ்மீர் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் வழக்குகள் பதியப்பட்டன.

இந்த வழக்குகளை சென்னை உயர் நீதிமன்றத்துக்கு மாற்றக் கோரி உதயநிதி ஸ்டாலின் தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு மீதான விசாரணை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்சீவ் கன்னா மற்றும் நீதிபதி சஞ்சய் குமார் ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று நடைபெற்றது.

அப்போது உதயநிதி ஸ்டாலின் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர்கள் பி.வில்சன், அபிஷேக் மனு சிங்வி ஆகியோர், "இந்த வழக்குகளை சென்னை உயர் நீதிமன்றத்துக்கு மாற்றவில்லை என்றால் கர்நாடகா உயர் நீதிமன்றத்துக்காவது மாற்ற வேண்டும். உதயநிதி ஸ்டாலின் பேசிய கருத்துகளைவிட பா.ஜ.க. நிர்வாகி நுபுர்சர்மா, அர்னாப் கோஸ்வாமி ஆகியோர் அதிகளவில் சர்ச்சைக்குரிய வகையில் பேசியுள்ளனர்.

அவர்கள் மீது பதியப்பட்டுள்ள வழக்குகள் குறிப்பிட்ட இடத்திலிருந்து வேறு பகுதிக்கு மாற்றப்பட்டன. தமிழகத்தின் துணை முதல்வராக உள்ள உதயநிதி ஸ்டாலினை இந்த விவகாரத்தில் வேண்டுமென்றே அலைக்கழிக்க வேண்டும் என்ற நோக்கில் தற்போது பிஹார் உள்ளிட்ட மாநிலங்களில் புதிதாக வழக்குகள் பதியப்படுகின்றன. எனவே உதயநிதி ஸ்டாலினுக்கு எதிராக புதிதாக வழக்குகள் பதிய தடை விதிக்க வேண்டும்" என வாதிட்டனர்.

அப்போது மகாராஷ்டிரா உள்ளிட்ட மாநிலங்களின் சார்பில் ஆஜரான மத்திய அரசின் சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, "சனாதன தர்மம் குறித்து தமிழகத்தின் துணை முதல்வராக பதவி வகிக்கும் உதயநிதி ஸ்டாலின் பொறுப்பற்ற முறையிலும், ஏற்றுக்கொள்ள முடியாத வகையிலும் பேசியுள்ளார். குறிப்பிட்ட ஒரு சமூகத்தை டெங்கு, மலேரியா கொசுக்களை அழிப்பதுபோல அழிக்க வேண்டும் என்றும் சனாதனத்தை அடியோடு வேரறுக்க வேண்டும் எனவும் வெறுப்பு பேச்சு பேசியுள்ளார், நாங்கள் தமிழகத்துக்கு எதிரானவர்கள் கிடையாது. ஆனால் இதுபோன்ற வெறுப்பு பேச்சுகளுக்கு எதிரானவர்கள்." என்றார்.

அதையடுத்து நீதிபதிகள், "நாங்கள் இந்த விஷயத்தில் தற்போது எந்த கருத்தையும் கூறவிரும்பவில்லை. இந்த வழக்கில் அனைத்து எதிர் மனுதாரர்களும் பதிலளிக்கும் வகையில் நோட்டீஸ் பிறப்பிக்கிறோம். அதே நேரம் சனாதன தர்மம் தொடர்பான பேச்சுக்காக உதயநிதி ஸ்டாலின் மீது புதிதாக எந்த வழக்கும் பதியக்கூடாது" என தடை விதித்து விசாரணையை ஏப்ரல் 21இற்கு தள்ளி வைத்து உத்தரவிட்டுள்ளனர்.



# மகா கும்பமேளாவில் தாக்குதல் நடத்த சதி: பப்பர் கல்சா தீவிரவாதி உ.பி.யில் கைது

பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ். உடன் தொடர்பு வைத்திருந்த பப்பர் கல்சா சர்வதேச தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர் உத்தர பிரதேசத்தில் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸ் நகரை அடுத்த குர்லியான் கிராமத்தைச் சேர்ந்தவர் லஜர் மசி. ஜெர்மனியின் பப்பர் கல்சா இன்டர்நேஷனல் (காலிஸ்தான் தீவிரவாத அமைப்பு) தலைவர் ஸ்வரன் சிங் (எ) ஜீவன் பாவ்ஜியுடன் இணைந்து செயல்பட்டதாக கூறப்படுகிறது.

மேலும் பாகிஸ்தானின் ஐ.எஸ். அமைப்புடன் லஜர் நேரடி தொடர்பு வைத்திருந்ததும் தெரியவந்தது. இதையடுத்து, அவர் மீது வழக்குப் பதிவு செய்து கைது செய்தனர். கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் நீதிமன்ற காவலில் இருந்து தப்பிச் சென்ற அவரை பஞ்சாப் பொலிஸார் தேடி வந்தனர்.

இந்நிலையில், லஜர் உத்தர பிரதேசத்தின் கவுஷாம்பி மாவட்டத்தில் இருக்கிறார் என பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளது. இதையடுத்து, பஞ்சாப் பொலிஸாரும் உத்தரபிரதேச சிறப்புப் படை (எஸ்.டி.எப்) பொலிஸாரும் இணைந்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். இதில் நேற்று அதிகாலை 3.20 மணியளவில் லஜர் மசியை கைது செய்தனர். அவரிடமிருந்து வெடி பொருள்கள் மற்றும் சட்டவிரோத ஆயுதங்களை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

இதனிடையே, மகா கும்பமேளாவின்போது தாக்குதலில் ஈடுபட லஜர் மசி சதித் திட்டம் தீட்டினார் என கூறப்படுகிறது. இது தொடர்பாக அவரை உத்தரபிரதேச பொலிஸார் தேடி வந்தனர். ஆனால் பாதுகாப்பு கெடுபிடி காரணமாக அவரால் தனது திட்டத்தை செயல்படுத்த முடியவில்லை என பொலிஸ் தலைவர் பிரசாந்த் குமார் தெரிவித்தனர்.





# பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் மக்கள் அமெரிக்காவிற்குள் நுழைவதற்குத் தடை?

பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த மக்கள் அமெரிக்காவிற்குள் நுழைவதற்குத் தடை விதிக்கப்படலாம் என்று வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு அபாயங்கள் காரணமாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இரு நாடுகளுக்கும் பயணத் தடை விதிக்க திட்டமிட்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடை அடுத்த வாரம் அமுலுக்கு வரக்கூடும் என ரொய்ட்டர்ஸ் தெரிவித்துள்ளது.

அத்துடன், இந்த 2 நாடுகளைத் தவிர, பட்டியலில் வேறு நாடுகளும் இருக்கலாம் என்று கூறப்படுகிறது.





# விண்ணில் செலுத்தப்பட்டு சில நிமிடங்களில் வெடித்து சிதறிய ஸ்பேஸ் எக்ஸ் விண்கலம்

எலான் மஸ்கின் ஸ்பேஸ் எக்ஸ் ஸ்டார்ஷிப் (SpaceX's Starship) விண்கலம் சோதனைக்காக விண்ணில் செலுத்தப்பட்ட சில நிமிடங்களில் வெடித்துச் சிதறியதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

விண்கலம் சோதனையை ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் நேரலையில் ஒளிபரப்பியது.

நேரலை காட்சிகளின் படி ஸ்டார்ஷிப் (Starship) விண்கலத்தின் இயந்திரங்கள் விண்ணில் ஏவப்பட்ட சில நிமிடங்களில் செயலிழந்தன.

இதையடுத்து தெற்கு ஃபுளோரிடா மற்றும் பஹாமஸ் அருகில் உள்ள வான்பகுதியில் விண்கலம் வெடித்து சிதறியுள்ளதாகவும் இதனால் உயிர் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக , ஃபுளோரிடா பகுதியில் சில விமான சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# அமெரிக்காவிற்கான ரஷ்ய தூதுவராக அலெக்சாண்டர் டார்ச்சீ நியமனம்



அமெரிக்காவுடனான நல்லிணக்கத்தை பேணும் நோக்கில், முன்னாள் இராஜதந்திரி அலெக்சாண்டர் டார்ச்சீ அமெரிக்காவிற்கான ரஷ்ய தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

ரஷ்யா மற்றும் அமெரிக்க அதிகாரிகளுக்கு இடையில் கடந்தவாரம் துருக்கியில் இடம்பெற்ற சந்திப்பின் போதே இந்த தீர்மானம் எட்டப்பட்டதாக ரஷ்ய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

64 வயதான அலெக்சாண்டர் டார்ச்சீவ் 2014 ஆம் ஆண்டு முதல் 2021 ஆண்டுவரை கனடாவுக்கான ரஷ்ய தூதுவராக செயற்பட்டுள்ளார்.

ஏனைய முன்னாள் ரஷ்ய இராஜதந்திரிகளைப் போலவே, அவர் சமீபத்திய ஆண்டுகளில் அமெரிக்கா மற்றும் மேற்கு நாடுகளுக்கு எதிரான கருத்துகளை வெளியிட்டிருந்தவராக கருதப்படுகிறார்.

பக்கம் 04

# கனடா முரசு

வெள்ளிக்கிழமை 07/03/2025

## றொறன்ரோவில் பயண அறிவுறுத்தல்

றொறன்ரோ மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் குளிர்கால பயண ஆலோசனை அமலில் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடுமையாக குறையும் 03▶



# கனடா, மெக்சிகோ மீதான வரிவிதிப்பை ஏப்ரல் 02 வரை ஒத்திவைத்தார் ட்ரம்ப்

**மெக்சிகோ, கனடா நாடுகளில் இருந்து இறக்குமதியாகும் பொருள்களுக்கு 25 வீத வரி விதிக்கும் நடவடிக்கையை ஏப்ரல் 2 வரை அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் ஒத்திவைத்துள்ளார்.**

**இதனையடுத்து கனடாவும் அமெரிக்காவுக்கு வரி விதிக்கும் முடிவை நிறுத்திவைத்துள்ளது. இந்தப் பின்னணியில் பங்குச்சந்தைகளின் வீழ்ச்சி, பொருளாதார நிபுணர்களின் எச்சரிக்கை மற்றும் அமெரிக்க ஓட்டோமொபைல் முன்னணி நிறுவனங்களின் தலையீடு ஆகியன இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

அமெரிக்க தேர்தலில் வெற்றி பெற்ற டொனால்ட் ட்ரம்ப் கடந்த ஜனவரி 20 ஆம் திகதி 2 ஆவது முறையாக ஜனாதிபதியாக பதவியேற்றார். ஜனாதிபதி பதவியேற்ற பிறகு பரஸ்பர வரி குறித்து அவர் அறிவித்தார்.

அண்மையில், அமெரிக்க நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்தில் முதல் முறையாக உரையாற்றியபோதும் ட்ரம்ப் பரஸ்பர வரி குறித்த தனது நிலைப்பாட்டை மீண்டும் தெளிவுபடுத்தினார்.

அப்போது அவர் பேசுகையில், “அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு இந்தியா 100 சதவீத வரி விதிக்கிறது. இதேபோல் மற்ற நாடுகளும் அதிக வரி விதிக்கின்றன. இது நியாயமற்றது. ஓட்டோமொபைல் பொருள்களுக்கு 100 சதவீதத்துக்கும் அதிகமாகவே இந்தியா வரி விதிக்கிறது. ஐரோப்பிய யூனியன், இந்தியா, சீனா, பிரேசில், மெக்சிகோ, கனடா போன்ற 04▶

# றொறன்ரோவில் வீடு விற்பனை இரண்டு வீதத்தினால் குறைந்தது

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், றொறன்ரோ பெருநகரப் பகுதியில் பெப்ரவரி மாத வீட்டு விற்பனை 2 வீதத்தினால் குறைந்துள்ளது என டொரொண்டோ வீட்டு மனை சபை Toronto Regional Real Estate Board (TRREB) அறிவித்துள்ளது.

கடந்த ஆண்டு பெப்ரவரியில் 5,562 வீடுகள் விற்கப்பட்ட நிலையில், இந்த வருடம் பெப்ரவரி மாத்தில் 4,037 வீடுகளே விற்கப்பட்டுள்ளன.

இந்த எண்ணிக்கை ஓராண்டு காலத்தில் 27 வீத வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது.

மேலும் கடந்த ஜனவரியுடன் ஒப்பிடுகையில், விற்பனை 28.5 வீதம் சரிவடைந்துள்ளது. 02▶



# கனடாவில் குறைந்தபட்ச ஊதியம் 17.75 டொலர்களாக உயர்த்தப்பட்டது

கனடாவில் குறைந்தபட்ச ஊதியம், 17.75 டொலர்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை கனடாவின் மத்திய அரசு தெரிவித்துள்ளது. இதனடிப்படையில், ஏப்ரல் முதலாம் திகதி முதல் இம்முறை நடைமுறைப் படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தற்போது உள்ள 17.40 டொலர்களாக செலுத்தும் குறைந்தபட்ச ஊதியத்தை விட 2.4 வீத அதிகரிப்பு என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள நிறுவனங்களில் வேலை செய்யும் பணியாளர்களின் சம்பளம் வாழ்க்கைச் செலவுடன் ஏற்றத்தாழ்வில்லாமல் இருக்க வேண்டும் என்பதற்காக இந்த உயர்வு செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக, பகுதி நேரம், தற்காலிக வேலைகள் மற்றும் குறைந்த ஊதியத்தில் உள்ள பணியாளர்களுக்கு இது நன்மை பயக்கும் என அரசு தெரிவித்துள்ளது.

அரசின் விதிமுறையின்படி, எந்த மாகாணத்திலும் அல்லது பிரதேசத்திலும் உள்ள குறைந்தபட்ச ஊதியம் மத்திய அரசாங்கத்தின் ஊதியத்தை விட அதிகமாக இருந்தால், தொழிலதிபர்கள் அதிக தொகையை வழங்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



## றொறன்ரோவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும், சராசரி விற்பனை விலை 1,084,547 டொலர்களாகும், கடந்த ஆண்டு பெப்ரவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் இது 2.2 வீத குறைந்துள்ளது.

கடந்த பெப்ரவரி மாதத்தில் 12,066 புதிய வீடுகள் விற்பனைக்காக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் இது கடந்த ஆண்டைவிட 5.4 வீத அதிகமாகும்.

கடன் விகிதங்கள் (borrowing costs) விரைவில் குறையும் என எதிர்பார்க்கப்படுவதால், வீடுகளை கொள்வனவு செய்வதற்கான இயலுமை அதிகரிக்கும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.



# இலங்கை விவசாயத்துறை முன்னேற்றத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு கனடா விருப்பம்

இலங்கையின் விவசாயத் துறையின் முன்னேற்றத்திற்கு ஒத்துழைப்பு வழங்க கனடா விருப்பம் தெரிவித்துள்ளது.

கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஷ் மற்றும் இலங்கை விவசாய அமைச்சர் கே.டி.லால்காந்த ஆகியோருக்கு இடையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் வகையில் விவசாயத் துறையில் மேற்கொள்ள வேண்டிய மாற்றங்கள் குறித்து இங்கு விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இலங்கையில் காலநிலைக்கு உகந்த திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு தாம் செயற்பட்டு வருவதாகவும் கனேடிய உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு, கிழக்கு விவசாய அபிவிருத்திக்கு சிறப்பான பங்களிப்பு வழங்கப்படும் எனவும் கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஷ் மேலும் கூறியுள்ளார்.









## றொறன்ரோவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெப்பநிலை காரணமாக வீதிகள் உறைந்து வழுக்கலாக மாறும் என சுற்றுச்சூழல் கனடா எச்சரித்துள்ளது.

வீதிகளில் தண்ணீர் உறையலாம், இதனால் வழுக்கல் நிலை உருவாகும். பெருநகர கோல்டன் ஹோர்ஸ்ஷூ பகுதிகளில் 70 கி.மீ./மணிக்கு மற்றும் தெற்கு நயாகராவில் 80 கி.மீ./மணிக்கு அதிகமான காற்று வீசும், என தேசிய வானிலை நிறுவனத்தின் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மோட்டார் வாகன சாரதிகள் அபாயகரமான குளிர்காலப் போக்குவரத்து நிலையை எதிர்பார்த்து பயண திட்டங்களை மாற்றிக் கொள்ள வேண்டும் என அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

முக்கியச் சாலைகள், நடைபாதைகள் மற்றும் 'பார்க்கிங்' பகுதிகள் உறைந்து வழுக்கலாக மாறும் வாய்ப்பு உள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை டொரொண்டோவில் சுமார் இரண்டு சென்றி மீற்றர் பனிப்பொழிவு ஏற்படும்.

பிற்பகலில் வெப்பநிலை மறை 2 பாகை செல்சியஸாக ஆக குறையும், ஆனால் காற்றின் ஈரப்பதன் காரணமாக உணரும் வெப்பநிலை மறை 9 பாகை செல்சியஸாக இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு டர்ஹாம் பகுதிகளில் சில பாடசாலை பஸ்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.




# ரொறன்ரோவில் மோசடிகள் காரணமாக 400 மில்லியன் டொலரை இழந்த மக்கள்

**கனடாவின் ரொறன்ரோவில் கடந்த ஆண்டில் மோசடிகள் காரணமாக சுமார் 400 மில்லியன் டொலர்களை மக்கள் இழந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.**

**இந்த எண்ணிக்கை பல்வேறு மடங்குகளினால் அதிகரிக்க கூடும் என தெரிவிக்கப்படுகிறது.**

**பெரும் எண்ணிக்கையிலானவர்கள் மோசடியில் சிக்கிய விவகாரம் தொடர்பில் முறைப்பாடு செய்வதில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

இந்த மாதம் மோசடிகளை தவிர்க்கும் மாதமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2024 ஆம் ஆண்டு சுமார் 400 மில்லியன் டொலர் பெறுமதியான மோசடி சம்பவங்கள் ரொறன்ரோவில் இடம் பெற்றுள்ளன.

ரொறன்ரோவில் சுமார் 17,000 மோசடி சம்பவங்கள் பதிவாகி இருந்தன என தெரிவிக்கப்படுகிறது.

இணைய வழியிலான மோசடி சம்பவங்கள் அதிக அளவில் இடம் பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது. கிரிப்டோ கரன்சி, பிரமிட் திட்டங் கள் உள்ளிட்ட பல்வேறு நிதி மோசடி கள் இடம் பெற்று வருகின்றன என பொலிஸார் பொது மக்களை எச்சரித் துள்ளனர்.

பல்வேறு வழிகளில் மக்கள் ஏமாற்றப்படுகின்றனர் எனவும் மோசடியில் சிக்கியவர்கள் வெட்கம் காரணமாக இந்த மோசடிகள் தொடர்பிலான தகவல்களை வெளியிட தயங்குகின்றனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே இவ்வாறான மோசடிகள் தொடர்பில் மக்கள் கூடுதல் அவதானம் செலுத்த வேண்டும் என ரொறன்ரோ பொலிஸ் பிரிவின் நிதிக் குற்றவியல் புலனாய்வு அதிகாரி டேவிட் கொபி தெரிவித்துள்ளார்.

## கனடா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடுகள், நாம் விதிக்கும் வரியை விட அதிக வரிகளை விதிக்கின்றன. அதை பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? எனவே, மற்ற நாடுகள் எவ்வளவு வரி விதிக்கின்றனவோ, அதே அளவுக்கு அமெரிக்காவும் வரி விதிக்கும்.

அமெரிக்க பொருள்களுக்கு மற்ற நாடுகள் அதிக வரி விதிப்பது பல ஆண்டுகளாக உள்ளது. இப்போது நாம் நடவடிக்கை எடுக்க வேண்டிய காலம் வந்துவிட்டது. வர்த்தக கொள்கைகளில் அமெரிக்காவுக்கும் மற்ற நாடுகளுக்கும் சமமற்ற நிலை உள்ளது. அதை சரி செய்வதற்குதான் பரஸ்பரம் வரி விதிக்கும் முறையை அமல்படுத்த நினைக்கிறேன்." என்றார்.

முன்னதாக, மெக்சிகோ மற்றும் கனடாவுக்கு 25 வீத இறக்குமதி வரி விதிக்கும் கோப்புகளில் அமெரிக்க ஜனாதிபதி கையெழுத்திட்டார். இதனால் உலகம் முழுவதும் பங்குச் சந்தைகளில் கடும் பாதிப்பு ஏற்பட்டது. குறிப்பாக அமெரிக்காவின் வளர்ச்சி பாதிக்கும், பண வீக்கம் தாறுமாறாக உயரும் என ட்ரம்ப்பின் முடிவின் மீது அமெரிக்க பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்தனர். இந்நிலையில், ட்ரம்ப் வரி விதிப்பை ஒரு மாதத்துக்கு ஒத்திவைத்துள்ளார்.

இந்நிலையில், அமெரிக்கா - மெக்சிகோ - கனடா ஒப்பந்தத்தை ஏற்று கனடாவில் இருந்து அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு 25 சதவீதம் வரி விதிக்கப்படாது. எனினும், இது ஒருமாத காலத்திற்கு மட்டும் தான் அமலில் இருக்கும் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

இதேவேளை, அமெரிக்காவிற்கு பதிலளிக்கும் விதமாக, கனடா அமெரிக்க தயாரிப்புகளுக்கு அதிக வரிகளை விதித்திருந்தது.

தற்போது அதை மாற்றும் எண்ணம் இல்லை என கனடா அரசாங்கம் தெரிவித்துள்ளது.